# ஜாலான் சீலாங், லெபோ புடுவில் அந்நிய வியாபாரிகளின்

# பொருள்களை டிபிகேஎல் பறிமுதல்

கோலாலம்பூர், மே 14 – கோலாலம்பூரில் உள்ள ஜாலான் துன் டான் சியூ சின் (ஜாலான் சீலாங்) லெபோ புடு ஆகிய பகுதிகளில், அந்நிய வியாபாரிகளின் பொருட்களை கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தது.

அனுமதியின்றி வியாபாரம் செய்து வரும் அந்நியத் தொழிலாளர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும் முயற்சியாக, டிபிகேஎல்லின் அமலாக்கப் பிரிவினர் மேற் கொண்ட நடவடிக்கையின் போது அப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஜாலான் சீலாங் பகுதியில் அந்நிய வியாபாரிகள் புரிந்து வரும் வியாபாரம் குறித்த காணொளி சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டு வந்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் அது கூறியது.

அதிகாரத் தரப்பிடமிருந்து அனுமதி பெறாமல், அந்த அந்நியர்கள் வெற்றிலை, உணவுப் பொருட்கள், ஆடைகளை அப்பகுதிகளில் விற்று வந்தது கண்டு பிடிக்கப்பட்டதாக, நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் டிபிகேஎல் தெரிவித்தது.

நேற்று திங்கள்கிழமை டிபிகேஎல் ஊழியர்கள் அப் பகுதியைப் பார்வையிட்ட போது, ஜாலான் சீலாங்கில்



ஒருவர் வெற்றிலையை விற்று வந்ததாக அது கூறியது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து பொருட்களும், செராஸ் தாமான் மிஹர்ஜா, ஜாலான் லொம்போங்கில் உள்ள டிபிகேஎல் பறிமுதல் கிடங்கிற்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் அது தெரிவித்தது.